1994 நவம்பர் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திரு. சோ. பாலகிருஷ்ணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

20—

முதுகுளத்தூர் ஆதிதிராவிட மாணவர் விடுதிக் கட்டிடத்தைப் பழுதுபார்த்தல்.

17472*—திரு.** சோ. பாலகிருஷ்ணன்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் உள்ள ஆதிதிராவிட மாணவர் விடுதிக் கட்டிடத்தைப் பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதியை ரூ. 93,500 செலவில் பழுது பார்ப்பதற்கான மதிப்பீடுகள் சென்னை தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து அரசுக்கு வரப்பெற்று பரிசீலனையில் உள்ளது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1964 ஆம் ஆண்டு தென்னாட்டு காந்தி என்று மதிக்கப்பட்ட நம்முடைய கக்கன் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட அந்த விடுதி வெறும் 50 மாணவர்களுக்காக கட்டப்பட்ட மிகச் சிறிய விடுதி. இன்று 150 மாணவர்களுக்கு மேல் வாழ்கிற அந்த விடுதியை ஒரு நிரந்தர விடுதியாக புதியதாக கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்று அந்த விடுதி மிக மோசமான நிலையில், பாம்புகள் போன்ற விஷப்பூச்சிகள் பரவுகிற இடமாகவும், செடி கொடிகள் நிறைந்த இடமாகவும் இருக்கிற காரணத்தால், உடனடியாக அந்த இடத்தை இடித்து, மிகப்பெரிய அளவில், 150 மாணவர்கள் தங்கி வாழ்கிற அளவுக்கு ஒரு சிறந்த விடுதியாக கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1994 நவம்பர் 4

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் ஆதிதிராவிட நல மாணவர் விடுதியை முதல் கட்டமாகப் பழுது பார்ப்பதற்காக 93,500 ரூபாய்க்கு விரைவில் நிதித்துறையினுடைய ஒப்புதலைப் பெற்று அரசாணை வெளியிடப்படும். அடுத்ததாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை, அங்கே ஆதிதிராவிட மாணவ, மாணவிகள் 150 பேர் இருப்பார்களேயானால் அந்த கோரிக்கையை ஏற்று, இதயதெய்வம், தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னர் எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்ட வினா எண் 2, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

2—

நீதிபதிகள் நியமனத்தில் பெண்களுக்கு முப்பது சதவிகித ஒதுக்கீடு செய்தல்.

***20815—திரு. ஆர். சிங்காரம் :**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பெண்களுக்கு 30 சதவிகித வாய்ப்பு என்ற அடிப்படையில் பெண் நீதிபதிகள் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1991 ஆம் ஆண்டு முதல் நீதிமன்ற நடுவர் பணியிடங்களில் நேரடி நியமனத்தைப் பொறுத்தவரையில், 30 சதவீதம் பெண்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி நியமனங்களில் பெண்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அதற்கு நன்றி. ஒதுக்கப்படுகிறதே தவிர, நியமிக்கப்படுகிறதா என்பதை நான்